# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 117/2018

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வா.சா.1. திருமதி. ஜீவா.

## குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்து மங்காவரத்தில் உள்ளது. வாதிகளின் தந்தை பெயர் முனிவேல். அவருக்கு 4 ஆண்பிள்ளைகள், 3 பெண்பிள்ளைகள். 3 பெண்பிள்ளைகள் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். ஆண்பிள்ளைகள் யாரும் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை. முனிவேலின் 4 பிள்ளைகளில் ஒருவர் பெயர் தனராஜ் என்றால் சரிதான். அவர்தான் எனது கணவர். வாதிகளுக்கு நான் அண்ணி உறவு முறை. சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதிகள் அழைத்து தான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு நான்கு புறம் யார் யார் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்தில் தண்ணீர் பாய்ச்ச மோட்டார், பம்பு செட் உள்ளதா என்று எனக்கு தெரியாது. சுலோச்சனா பெரவலூரில் உள்ளார். அது சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது. 2 ம் வாதி வன்னிப்பாக்கத்தில் உள்ளார். அதுவும் சுமார் 20 கி.மீ. தொலைவில்

உள்ளது. ஜெயக்கொடி மீஞ்சூரில் உள்ளார். சுமார் 20 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. வாதிகள் யாரும் தாவா சொத்து இருக்கும் ஊரில் இல்லை என்றால் சரிதான். இதனால் வரை தாவா சொத்தை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் வாதிகளின் அண்ணி என்பதால் அவர்களுக்கு கட்டுப்பட்டு சாட்சி சொல்கிறேன் என்றும் எனக்கு வழக்கு சொத்தை பற்றி விவரம் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.